# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு

தொகுப்பு
கார்த்திகா சிவகுமார்



# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு

பூமன்னுமாது பொருந்திய மார்பன்
புகழ்மலிந்த

பாமன்னுமாற னடிபணிந்துய்ந்தவன்
பல்கைலேயார்

தாம்மன்னவந்த விராமானுசன்
சரணாரவிந்தம்
!
நாமன்னிவாழ நெஞ்சே ".
சொல்லுவோம் அவன்நாமங்கேள

இராமானுச நூற்றந்தாதி

நாம் அன்னி வாழ நெஞ்சே சொல்லு என் உடையவரின் நாமங்கைள ஏனெனில் . ஆழ்வார்கள் காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் வைணவம் மங்கிய காலம் நாதமுனிகள் நம்மாழ்வார் பாசுரங்கைள திருக்குடந்தை சாரங்கபாணி திருக்கோவிலில் ஆராவமுதன் முன் பாடினார் நம்மாழ்வார் பாசுரங்கைள பாடி , முடிக்கும் பொழுது ஆராஅமுதன் கூட்டத்தோடு கூட்டமாக பக்தன் போல் வந்து இவ்வளவு பாசுரங்கேள இப்படி அழகாக இருக்கிறது என்றால் மீதமுள்ள மற்ற பாசுரங்கள் கேட்கும் பொழுது எவ்வளவு அற்புதமாக இருக்கும் என்று கூறிக்கொண்டிருந்தார்
.

பாசுரங்கள் தான். அதுவும் 100 பாடல்கள் வரை தான். இவ்வாறு கூட்டத்தில் ஒருவர் மற்ற பாசுரங்கள் பற்றி கூறியதும், உடனே விசாரிக்கத் தொடங்கிவிட்டார் நாதமுனிகள். மற்ற பாசுரங்கள் பற்றி எங்கே சென்று அறிந்து கொள்வது என்று கேட்டுக் கொண்டிருக்க, கூட்டத்தில் ஒருவரோ ஆழ்வார் திருநகரி சென்றால் அனைத்து பாசுரங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என்று சொன்னார்.

நாதமுனிகளோ ஆராவமுதனை வணங்கி உடனே ஆழ்வார் திருநகரி புறப்பட்டு, நம்மாழ்வாரை வணங்கினார். நம்மாழ்வாரின் சீடரான மதுரகவி ஆழ்வார் காலத்துக்குப் பின், வரிசையாக பல சீடர்கள் தொடர்ந்து ஆழ்வார் திருநகரியில் வழிபட்டனர். அவர்களிடம் நாதமுனிகள் நம்மாழ்வாரின் மற்ற பாசுரங்கள் பற்றி கேட்டார். அவர்களோ நம்மாழ்வார் விக்கிரகம் முன் பாசுரங்கள் பாடினால் நம்மாழ்வாரே நேரில் தோன்றி அளிக்கலாம்.. எங்களிடம் அவரது சில பாசுரங்கள் தவிர இல்லை என்று சொன்னார்கள்.

பிறகு நம்மாழ்வார் விக்கிரகம் முன் அமர்ந்து நம்மாழ்வாரின் பாசுரங்களை 12000 முறை பாடினார். அவர் பாடி முடிக்கையில், நம்மாழ்வார் நாதமுனிகளுக்குக் காட்சி கொடுத்தார். அவருக்கு 4000 திவ்விய பிரபந்தங்களையும் அருளினார். இதைக்கண்ட நாதமுனிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

நம்மாழ்வார் தன் மடியிலிருந்த ஒரு அழகான சிறிய சிலையைக் கொடுத்து நாதமுனிகளிடம் இதை தினமும் பூஜிக்கச் சொன்னார். 'நாதமுனிகளிடம் இந்தச் சிலையைக் கொடுக்கும் பொழுது "பொலிக! பொலிக!" என்று சொல்லிக் கொடுத்தார். கி.பி.1017ல் பிறக்கப்போகிற இராமானுஜருக்குக் கலியுகம் தொடங்கிய போதே கட்டியம் கூறியவர் நம்மாழ்வார் .

நம்மாழ்வார் கொடுத்த விக்கிரகம் தான் இன்றும் உலகைக் காத்துவரும் #ஸ்ரீஇராமானுஜர். நாதமுனிகள் தான் அறிந்த நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களை உலகறிய வெளியிட்டார். நாதமுனிகள் நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களைத் தொகுத்தார்.

அந்த நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களையும் உயிர் மூச்சாக மதித்து, அதை நம்மிடையே எளிய முறையில் பரப்பியவர் இராமானுஜர் .

நம்மாழ்வாருக்கு இராமானுஜரின் சிலை எப்படி கிடைத்தது என்று பார்க்கலாம்

நம்மாழ்வார் 32வருடங்கள் வாழ்ந்தார் அவர் குழந்தையாகப் பிறந்த வது நா16ளில் குழந்தைைய ஆழ்வார் திருநகரியிலுள்ள பொலிந்து நின்ற பிரானின் திருக்கோவிலில் ஆலமரத்தின் அருகில் பெற்றோர் இருந்தனர் குழந்தை தவழ்ந்து மெல்ல மரம் ஏறி புளிய மரத்தில் தவம் செய்தைதக் கண்டு அனைவரும் ஆச்சரியமைடந்தனர் . அப்போதிலிருந்து 16வயது வைர தவத்தில் இருந்தார் அதன் பின் ஆண்16கள் நாலாயிரத் திவ்விய பிரபந்தங் களில் திருவிருத்தம் திருவாசிரியும் பெரிய திருவுந்தாதி , திருவாய்மொழி பாசுரங்கைளப் பாடினார் .

அவரது சீடர் தான் மதுரகவி ஆழ்வார் அவர் தன் குருைவேய இறைவனாகக் கொண்டு பாசுரங் கள் பாடி அனுபவித்தார்.அவர் கண்ணிநுண்சிறுதாம்பு பாசுரங் கள் பாடினார் .

குருவான நம்மாழ்வாருக்கு சேவை செய்து வரும் பொழுது ஓருநாள் நம்மாழ்வார் மதுரகவி ஆழ்வாரிடம் நான் வைகுண்டத்திற்குப் புறப்படும் வேைல வந்துவிட்டது என் றார் இதைக்கேட்ட மதுரகவி ஆழ்வாருக்கு பயங் கர மனவருத்தம் சுவரமி தாங்கள் இங்ே க எங்களுக்காக இருக்கக்கூடாதா என்றார் நம்மாழ்வாரோ மதுரகவி ஆழ்வாரிடம் தாமிரபரணி ஆற்றில் நீர் எடுத்து வாரும் என்றார் .

மதுரகவி ஆழ்வாரும் நீர் எடுத்து வந்தார் அந்த நீரை காய்ச்சுமாறு நம்மாழ்வார் கூற , மதுரகவி ஆழ்வாரும் காய்ச்சினார்.நீரிலிருந்து ஒரு விக்கிரகம் வெளிவந்தது. அதைக்கண்ட மதுரகவி ஆழ்வார் நான் உங்களுடைய சிைலயக் கேட்டால் நீங் கள் ேவறு யாருடைய சிைலையக் கொடுக்கிறீர்கள் என்றார் நம்மாழ்வாரோ அந்த சிைலயப் பெற்று மறைத்து வைத்துக் கொண்டு இந்த சிலை உனக்கல்ல என்று கூறி ,

மறுபடியும் தாமிரபரணி நீர் எடுத்து காய்ச்சச் சொன்னார். மதுரகவி ஆழ்வார் தாமிரபரணி நீர் எடுத்து காய்ச்சினார், அப்போது நம்மாழ்வார் விக்கிரகம் வெளிவந்தது. மதுரகவி ஆழ்வாருக்குச் சந்தோசம். நம்மாழ்வார் வைகுண்டம் சென்றபின் இந்த சிலையையே தொடர்ந்து பூஜித்தார். இந்த சிலை இன்னும் ஆழ்வார் திருநகரியில் புளிய மரத்தின் அருகில் நம்மாழ்வார் சன்னிதியில் உள்ளது.

ஒருசிலையை மறைத்தார் அல்லவா நம்மாழ்வார் .அந்த சிலை தான் இராமானுஜர். நாதமுனிகள் வந்து பாசுரங்கள் கேட்கும் பொழுது, அவர் பாடிய பாசுரங்களையும் கொடுத்து, மற்ற ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களையும் கொடுத்து, 'பொலிக! பொலிக! என்று கூறி இந்த விக்கிரகத்தையும் நாதமுனிகளிடம் கொடுத்தார் நம்மாழ்வார்.

நாதமுனிகள் பூஜித்து, அவர்களுக்குப்பின் பின் பல சீடர்கள் தொடர்ந்து அந்த விக்கிரகத்தை பூஜித்து வந்தார்கள்.

தான் அவதரிக்கும் முன்பே பூஜிக்கப்பட்ட ஒரே குரு இராமானுஜர் தான். இதுவரையில் யாருக்கும் இப்படி பாக்கியம் கிடைக்கவேயில்லை. அந்த சிறப்பு இராமானுஜர் அவதரிக்கும் முன்னமே கிட்டியதால் தான் இராமானுஜரை தெய்வாம்சம் பொருந்தியவர்,அந்த இறைவனே இராமானுஜர் என்றெல்லாம் சொல்லலாம் .

...

இராமானுஜர் என்பவர் கடைலப் போன்றவர்.அந்த கடலின்முழு சரித்திரத்தையும் நம்மால் அறிந்து கொள்ள முடியாது . அப்படி முயன்றால் மிக்க மகிழ்ச்சி கடலுக்குள்ே பானால் நீந்தி கரை சேர முடியாது ஆனால் அந்த கடலையும் கடல் அலைகைளயும் நாம் ரசிக்கலாம் அல்லவா அந்த!கருணைக் கடலின் அவதார நோக்கத்தையும் அவர் ெ, சய்த கைங்கர்யங்கள் பற்றியும் கடல் அலைகைளப் போல் அடியேனுக்குத்தெரிந்தவைர பதிவிடுகிறேன்நீங்களும் அந்த பெருங்கருணைக்கடைல ரசித்திடுங்கள்.

இராமானுஜர் ஆதிசேஷனின் அவதாரம் பஞ்ச ஆயுதங்களின் அம்சமாகேவ பிறந்தவர் .

ஶ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்திலே குருபரம்பைர என்று சொல்வார்கள் முதலில் குருபரம்பைர பற்றி பார்ப்போம்.

🌼🌹 குருபரம்பைர :-

நாமெல்லாம் பூமியில் பிறவி எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம் . புண்ணியங்கைளயும் பாவங்கைளயும் மாற்றி மாற்றி அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் புண்ணியம் அதிகமானால் அதைப் போக்க மறுபிறவி எடுக்கிறோம் பாவங்கள் அதிகமானாலும் மறுபிறவி எடுக்கிறோம் இப்படியே மாற்றி மாற்றி புனரபி ஜனனம் புனரபி மரணம் என மாற்றி மாற்றி பிறவி எடுத்துக்கொண்டே ே பாகிறோம் இதைத்தடுத்து மறுபிறவி அடுத்தபிறவியே வேண்டாம் என்று சொல்லிக்

கொள்கிறோம். நாம் செய்த கர்மாக்களை இப்பிறவிலேயே அனுபவித்துவிட்டால்? அடுத்து நமக்கு வைகுண்டம் தான்.

அப்பேர்ப்பட்ட கர்மாக்களை அழிக்க, நித்ய அனுஷ்டானங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்படி நித்ய அனுஷ்டாங்களைக் கடைப்பிடித்தால், பாவங்கள் அனைத்தும் தொலைந்துவிடும்.

வேதங்கள் தான் சட்டதிட்டங்கள். ரிக், யஜீர், சாமம், அதர்வண வேதங்களால் சாஸ்திரங்களை வகுத்துக் கொடுத்தார் இறைவன். நமக்கு சரீரம், சாஸ்திரங்கள், ஞானங்கள் கொடுத்தார் இறைவன். ஆழமான கிணற்றில் நாம் விழுந்துவிட்டால், நம்மைக் காப்பாற்ற யாராவது வருவார்களா என்று எதிர்பார்க்கிறோம் அல்லவா? அப்படி சம்சார சாகரத்தில் விழுந்து, தத்தளித்துக் கொண்டிருக்கும் நம்மைக் காப்பாற்ற இறைவனே வைகுண்டத்திலிருந்து முதலில் கீழிறங்கி வருகிறார். ஆனால், அப்படி அவர் கீழிறங்கி வந்தாலும் அவரால் நம்மைக் கரை சேர்க்க முடியவில்லை. ஏனெனில், கண்ணனாக, இராமனாக பிறவிகள் எடுத்து தசாவாதாரம் எடுத்தார்.

இரண்டாவதாக நம்மையும் பகவத் பக்தியிலே ஆழ்த்தவே பன்னிரண்டு ஆழ்வார்கள் அவதாரம் செய்தார்கள். பெருமானிடத்திலே பக்தியைத் தூண்டி, பெருமானையே அடைய வேண்டிய வழியை, நாலாயிரம் பாசுரங்கள் மூலம் நமக்கு உரைத்தார்கள் ஆழ்வார்கள்.

ஆழ்வார்கள் பிறவி முடிந்தபின், மூன்றாவதாக நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தையே புத்தகமாகக் கொண்டு அதை உபதேசிக்க நித்யசூரிகளை ஆச்சார்யாரார்களாக அனுபவித்து வைத்தார் ஸ்ரீமந்நாராயணன்.

முதல் ஆச்சாரியனாக நாதமுனிகள் திருஅவதாரம் பண்ணினார். அவருக்கு குமாரர் ஈஸ்வர முனிகள் திருஅவதாரம் பண்ணினார். அவருடைய திருக்குமாரராக யமுனாச்சாரியார் திருஅவதாரம் பண்ணினார்.

நாதமுனிகள், யமுனாச்சாரியார் என்ற இந்த திருநாமத்தை வைத்துதான் குருபரம்பரை ஸ்லோகம் உண்டாக்கப்பட்டது. இதை பாடியவர் கூரத்தாழ்வார். குருபரம்பரையை வணங்குகிறேன் என்பது தான் அந்த ஸ்லோகம்.

ஆச்சார்யார்களையே முத்தாக, இரத்தினமாக செதுக்கப்பட்ட ஹாரம் தான் "குருபரம்பரா ஹாரம்" என்று சொல்வார்கள்.

குருபரம்பரையில் முதல் ஆச்சாரியன் ஸ்ரீமந்நாராயணனான பெரிய பெருமாள். நர நாராயணரில் நரனுக்கு தன்னுடைய திருமந்திரத்தை உபதேசித்தார் அல்லவா. அர்ஜீனனுக்கு ஆச்சார்யனாக இருந்து கீதையைக் கொடுத்த கீதாச்சாரியன் அல்லவா அவன். அதனால் அவனே முதல் ஆச்சார்யன்.

இரண்டாவது மகாலக்ஷ்மியான பெரிய பிராட்டி - அந்த லக்ஷ்மிக்கு பெருமாள் ஸ்வயம் மகாமந்திரத்தை உபதேசித்தார். அவரிடத்தில் உபதேசம் பெற்றுக் கொண்டதால் மகாலக்ஷ்மி இரண்டாவது ஆச்சாரியன்.

மூன்றாவதாக லக்ஷ்மியிடத்தில் உபதேசம் பெற்றுக் கொண்டது விஷ்வக்ஷேனர்.

அதனால் விக்வக்ஷேனர் மூன்றாவது ஆச்சாரியன்.

விஷ்வக்ஷேனரிடத்தில் உபதேசம் பெற்றுக் கொண்டது நம்மாழ்வார் .அதனால் அவர் நான்காவது ஆச்சாரியன்.

நம்மாழ்வாரிடத்தில் உபதேசம் பெற்றுக் கொண்டவர் நாதமுனிகள் .அதனால் அவர் ஐந்தாவது ஆச்சாரியன்.

நாதமுனிகளின் சிஷ்யர்கள் உய்யக்கொண்டார் மற்றும் மணக்கால் நம்பிகள். மணக்கால் நம்பிகளின் சிஷ்யர் தான் ஆளவந்தார்.

ஆறாவதாக நாதமுனிகளின் சிஷ்யர் உய்யக்கொண்டார்.

ஏழாவதாக பெரிய நம்பிகள்.

முதல் தலைவராக நாதமுனிகள், அதன் பின் உய்யக் கொண்டார், மணக்கால் நம்பிகள், ஆளவந்தார், பெரிய நம்பிகள்.

ஆளவந்தாரின் சீடர்கள் ஐந்து பேர். அவர்கள் 1. பெரிய நம்பிகள் 2. பெரிய திருமலை நம்பிகள் 3. திருக்கோட்டியூர் நம்பிகள் 4. திருக்கச்சி நம்பிகள் 5.திருமலையாண்டான்.

எட்டாவதாக இந்த ஹாரத்தில் இருப்பவர் தான் உலகேம போற்றும் ஸ்ரீஇராமானுஜர் .

